## வகுப்பு - 8 - புவியியல், 7 - கண்டங்களை ஆராய்தல்

## ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா

21. தொடர்பில்லாததை நீக்குக. கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலங்கள்

(1) ஆப்பிரிக்காவின் பெரும்பாலான மலைகள் காணப்படும் பகுதி.

(2) எத்தியோப்பியாவிலிருந்து நன்னம்பிக்கைமுனை வரை நீண்டு அமைந்துள்ளது.

(3) குறைவான மக்கட்தொகையுடன் வளமான புல்வெளிகள், காடுகள், நீரோடைகள் மற்றும் நீர் வீழ்ச்சிகள் போன்ற இயற்கை காட்சிகளை கொண்ட உலக சுற்றுலா தலங்களை கொண்ட பகுதி.

(4) 6895 மீட்டர் உயரம் கொண்ட கிளிமஞ்சாரோ சிகரத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

22. கூற்றை ஆராய்க.

**கூற்று** 1: கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலப்பகுதியில் அமைந்துள்ள கென்ய மற்றும் ருவான்சோரி மலைத்தொடர் பகுதியில் குறைவான மக்கட் தொகையுடன் வளமான புல்வெளிகள், காடுகள், நீரோடைகள் மற்றும் நீர்வீழ்ச்சிகள் போன்ற இயற்கை காட்சிகளைக் கொண்டுள்ளது.

**கூற்று** 2: கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலப்பகுதியில் அமைந்துள்ள கென்ய மற்றும் ருவான்சோரி மலைத்தொடர் பகுதிகளில் காணப்படும் பனி சூழ்ந்த காலைப்பொழுதும், மலைத்தென்றலும் உலகின் பிற பகுதிகளிலிருந்து சுற்றுலா பயணிகளை ஈர்க்கிறது.

(1) கூற்று 1 மற்றும் 2 சரி (2) கூற்று 1 மற்றும் 2 தவறு

(3) கூற்று 1 சரி , கூற்று 2 தவறு (4) கூற்று 1 தவறு , கூற்று 2 சரி

23. **வரிசைப்படுத்துக**

1. புருண்டியில் உற்பத்தியாகும் நதி வெள்ளை நைல்.
2. எத்தியோப்பியாவில் உற்பத்தியாகும் நதி நீல நைல்.
3. சூடானில் உள்ள கார்ட்டும் என்ற இடத்தில் வெள்ளை நைல் மற்றும் நீலநைல் நதிகள் இரண்டும் இணைந்து நைல் நதியை தோற்றுவிக்கின்றன.

LIVEWORKSHEETS

4. நைல் நதி வடக்கு நோக்கி பாய்ந்து மத்தியதரைக்கடலில் கலக்கிறது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | 4 | 3 | 2 | 1 | (2) 1 | 2 | 3 | 4 |
| (3) | 3 | 4 | 1 | 2 | (4) 4 | 1 | 2 | 3 |

24. வெப்ப பாலைவனங்களின் அமைவிடம்

(1) கண்டங்களின் மேற்கு விளிம்புகளில் புவிநடுக்கோட்டின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகள் ($20^0$ முதல் $30^0$)

(2) கண்டங்களின் கிழக்கு விளிம்புகளில் புவிநடுக்கோட்டின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகள் ($20^0$ முதல் $30^0$)

(3) கண்டங்களின் மேற்கு விளிம்புகளில் புவிநடுக்கோட்டின் வடக்கு மற்றும் மேற்கு பகுதிகள் ($30^0$ முதல் $40^0$)

(4) கண்டங்களின் கிழக்கு விளிம்புகளில் புவிநடுக்கோட்டின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகள் ($30^0$ முதல் $40^0$)

25. கூற்றை ஆராய்க.

**கூற்று**: வெப்ப பாலைவனங்கள் கண்டங்களின் மேற்கு விளிம்புகளில் புவிநடுக்கோட்டின் வடக்கு மற்றும் தென் பகுதிகளில் ($20^0$ முதல் $30^0$) அட்சங்கள் வரை அமைந்துள்ளன.

**காரணம்**: வெப்ப பாலைவனங்கள் வியாபாரக் காற்று வீசும் மண்டலத்தில்($20^0$ வடக்கு - $30^0$ வடக்கு மற்றும் $20^0$ தெற்கு - $20^0$ தெற்கு அட்சம் அமைந்துள்ளன.

**விளக்கம் 1**: வியாபாரக் காற்றுகள் வடகோளத்தில் வடகிழக்கில் இருந்தும் தென்கோளத்தில் தென் கிழக்கிலிருந்தும் வீசுகின்றன.

**விளக்கம் 2**: வியாபாரக் காற்று பொதுவாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வீசுகிறது

**விளக்கம் 3**: வியாபாரக் காற்று கண்டங்களின் கிழக்கு விளிம்புகளில் அதிக மழைப்பொழிவை ஏற்படுத்தி மேற்கு பகுதியை அடையும் பொழுது ஈரப்பதத்தை இழந்து வறண்ட காற்றாக வீசுகிறது.

**விளக்கம் 4**: எனவே, கண்டங்களின் மேற்கு பகுதிகள் பாலைவனங்களாக உள்ளன.

LIVEWORKSHEETS

(1) கூற்று, காரணம், விளக்கங்கள் (1, 2, 3, (4) சரி கூற்று, காரணம் மற்றும் விளக்கங்களுக்கிடைய தொடர்பு உள்ளது.

(2) கூற்று காரணம், விளக்கங்கள் (1, 2, 3, (4) தவறு கூற்று, காரணம் மற்றும் விளக்கங்களுக்கிடையே தொடர்பு இல்லை.

(3) கூற்று, காரணம் சரி, விளக்கங்கள் தவறு கூற்று மற்றும் காரணம் இடையே தொடர்பு உள்ளது. விளக்கங்களில் தொடர்பு இல்லை.

(4) கூற்று, காரணம், விளக்கங்கள் (1, (2) சரி மற்றும் விளக்கங்கள் (3, (4) தவறு கூற்று, காரணம், விளக்கங்கள் (1, (2) இடையே தொடர்பு உள்ளன விளக்கங்கள் (3, (4) ல் தொடர்பு இல்லை.

26. **வரிசைப்படுத்துக**

1. வெப்பப் பாலைவனங்கள் கண்டங்களின் மேற்கு விளிம்புகளில் புவிநடுக்கோட்டின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் ($20^0$ முதல் $30^0$ அட்சங்கள்) அமைந்துள்ளன.
2. வெப்பப் பாலைவனங்கள் வியாபாரக் காற்று வீசும் மண்டலத்தில் அமைந்துள்ளன.
3. வியாபாரக் காற்றுகள் வடகோளத்தில் வடகிழக்கில் இருந்தும் தென்கோளத்தில் தென் கிழக்கிலிருந்தும் வீசுகின்றன.
4. வியாபாரக் காற்றானது பொதுவாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வீசுகிறது.
5. வியாபாரக்காற்று கண்டங்களின் கிழக்கு விளிம்புகளில் அதிக மழைப்பொழிவை ஏற்படுத்தி மேற்கு பகுதியை அடையும் பொழுது ஈரப்பதத்தை இழந்து வறண்ட காற்றாக வீசுகின்றது.
6. எனவே, கண்டங்களின் மேற்கு பகுதிகள் வெப்ப பாலைவனங்களாக உள்ளன.

(1) 1, 2, 3, 4, 5, 6 (2) 6, 5, 4, 3, 2,1 (3) 3, 2, 1, 6, 5, 4 (4) 5, 4, 3, 2, 1, 6

27. தவறானதை நீக்குக

**கூற்று-1**: ஆப்பிரிக்காவில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான விலங்கின வகைகள் காணப்படுகின்றன.

**கூற்று-2**: புவியின் மிகப்பெரிய (யானைகள்) மற்றும் உயரமான (ஒட்டகச்சிவிங்கி) நிலவாழ் உயிரினங்கள் ஆப்பிரிக்காவில் உள்ளன.

LIVEWORKSHEETS

**கூற்று-3:** வெள்ளை காண்டாமிருகம், வெஸ்டர்ன் கிரீன் மாம்பா, வரிக்குதிரை, ஆப்பிரிக்க யானை, மனித குரங்கு, காட்டெருமை, நீர் யானை மற்றும் ஒட்டகச் சிவிங்கி போன்றவை முக்கிய விலங்கினங்களாகும்.

**கூற்று-4:** போனபோ(குரங்கு வகை) காட்டு நாய்கள், கழுதைபுலி மற்றும் லெமூர்(நரி போன்ற முகம் கொண்டவை) ஆகிய விலங்குகள் ஆப்பிரிக்க கண்டத்திற்கு உரித்தான சில விலங்கினங்களாகும்.

(1) கூற்று - 1 தவறு (2) கூற்று - 2 தவறு

(3) கூற்று - 3 தவறு (4) கூற்று 4 தவறு

28. கூற்றை ஆராய்க.

**கூற்று-1:** போக்குவரத்து ஒரு பகுதியின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கிறது.

**கூற்று-2:** பாதகமான இயற்கை நிலதோற்ற அமைப்பு ஆப்பிரிக்க நாடுகளின் போக்குவரத்து வளர்ச்சியை பாதிக்கிறது.

**கூற்று-3:** போக்குவரத்து வளர்ச்சி குறைவால் ஆப்பிரிக்காவில் மந்தமான பொருளாதார வளர்ச்சி நிலவுகிறது.

(1) கூற்று 1, 2, 3 சரி, கூற்றுகளுக்கிடையே தொடர்பு உள்ளன

(2) கூற்று 1, 2, 3 தவறு, கூற்றுகளுக்கிடையே தொடர்பு இல்லை

(3) கூற்று 1, 2 சரி, கூற்று 3 தவறு, கூற்றுகளுக்கிடையே தொடர்பு இல்லை

(4) கூற்று 1 தவறு, கூற்று 2, 3 சரி, கூற்றுகளுக்கிடையே தொடர்பு உள்ளன

29. கூற்றை ஆராய்க.

**கூற்று:** ஆப்பிரிக்காவில் நிலவழிப் போக்குவரத்துகளான சாலை மற்றும் இரயில் போக்குவரத்து அமைப்பானது குறைவான வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

**காரணம்:** ஆப்பிரிக்காவில் பாலைவனம் மற்றும் அடர்ந்த காட்டு பகுதிகள் அதிகம் காணப்படுகின்றன.

**விளக்கம்:** பாலைவனம் மற்றும் அடர்ந்தகாட்டு பகுதிகளில் சாலைகள் மற்றும் இருப்புபாதைகள் அமைப்பது மிகவும் கடினமானதாகும்.

(1) கூற்று, காரணம் விளக்கம் சரி, இவற்றிற்கிடையே தொடர்பு உள்ளன

LIVEWORKSHEETS

(2) கூற்று, காரணம், விளக்கம் தவறு, இவற்றிற்கிடையே தொடர்பு இல்லை

(3) கூற்று, காரணம் சரி, விளக்கம் தவறு, இவற்றிற்கிடையே தொடர்பு உள்ளன

(4) கூற்று, விளக்கம் சரி, காரணம் தவறு, இவற்றிற்கிடையே தொடர்பு இல்லை.

30. **கூற்று:** $10^0$ 4' தெ - $39^0$ 08' தெ அட்சம் வரை பரவியுள்ள ஆஸ்திரேலியா கண்டத்தை மகரரேகை ($23^0$ 30' தெ அட்சம்) ஏறத்தாழ சம பகுதிகளாகப் பிரிக்கிறது.

**காரணம்:** $23^0$ 30' தெற்கு அட்சரேகையான மகரரேகைக்கு வடக்கே $13^0$ 26' மேலாக $10^0$ 4' தெற்கு அட்சத்தில் தொடங்கி தெற்கே $15^0$ 38' கீழாக $39^0$ 08' தெற்கு அட்சரேகை வரை பரவியுள்ளது.

**விளக்கம்:** $10^0$ 4' தென் அட்சத்திற்கும் $23^0$ 30' தென் அட்சத்திற்கும்(மகரரேகை) உள்ள அமைவிட தொலைவு $13^0$ 26' மற்றும் $23^0$ 30' தென் அட்சத்திற்கும் (மகரரேகை) $39^0$ 08′ தென் அட்சத்திற்குமான அமைவிட தொலைவு = $15^0$ 38′.எனவே, $23^0$ 30′ தென் அட்ச ரேகையான மகரரேகைக்கு வடக்கே $13^0$ 26' மேலாகவும் தெற்கே $15^0$ 38′ கீழாகவும் ஏறக்குறைய சமமாக பரவி இருப்பதால் மகரரேகை ஆஸ்திரேலியா கண்டத்தை ஏறக்குறைய சமமாக பிரிக்கிறது.

(1) கூற்று, காரணம், விளக்கம் சரி இவற்றிற்கிடையே தொடர்பு உள்ளன

(2) கூற்று, காரணம், விளக்கம் தவறு இவற்றிற்கிடையே தொடர்பு இல்லை

(3) கூற்று சரி, காரணம் மற்றும் விளக்கம் தவறு இவற்றிற்கிடையே தொடர்பு இல்லை

(4) கூற்று, காரணம் சரி மற்றும் விளக்கம் தவறு இவற்றிற்கிடையே தொடர்பு உள்ளன

31. பொருத்துக

| | | |
|---|---|---|
| i. நியூசவுத்வேல்ஸ் | - | 1. கான்பெரா |
| ii. குயின்ஸ்லாந்து | - | 2. டார்வின் |
| iii. தெற்கு ஆஸ்திரேலியா | - | 3. பெர்த் |
| iv. டாஸ்மேனியா | - | 4. மெல்பெர்ன் |
| v. விக்டோரியா | - | 5. ஹோபார்ட் |

LIVEWORKSHEETS

vi. மேற்கு ஆஸ்திரேலியா - 6. அடிலைட்

**ஒன்றிய பகுதிகள் (யூனியன் பிரதேசங்கள்)**

vii. வடக்கு ஒன்றிய பகுதி - 7. பிரிஸ்பேன்

viii. ஆஸ்திரேலிய தலைநகர் பகுதி - 8. சிட்னி

| | i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| (2) | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| (3) | 5 | 6 | 7 | 8 | 1 | 2 | 3 | 4 |
| (4) | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 1 | 2 |

**<u>மத்திய தாழ் நிலங்கள்</u>**

32. **கூற்று:** ஆஸ்திரேலிய கிழக்கு உயர்நிலங்கள், பெரும்பிரிப்பு மலைத்தொடர் என்றும் அழைக்கப்படுகிறது.

**காரணம்:** ஆஸ்திரேலிய கிழக்கு உயர்நிலங்கள் மேற்கு மற்றும் கிழக்குநோக்கி பாயும் ஆறுகளை பிரிக்கிறது.

(1) கூற்று மற்றும் காரணம் சரி, இரண்டிற்குமிடையே தொடர்பு உள்ளது

(2) கூற்று மற்றும் காரணம் தவறு இரண்டிற்குமிடையே தொடர்பு இல்லை

(3) கூற்று சரி, காரணம் தவறு, இரண்டிற்குமிடையே தொடர்பு உள்ளது

(4) கூற்று தவறு, காரணம் சரி இரண்டிற்குமிடையே தொடர்பு இல்லை

33. கூற்றை ஆராய்க.

**கூற்று:** ஆஸ்திரேலியாவில் குறைந்த நீரே ஆறுகளின் மூலம் கடலில் கலக்கிறது.

**காரணம்:** ஆஸ்திரேலியா வெப்பம் மிகுந்து வறண்டு காணப்படுவதால் நீர் ஆவியாதல் அதிகமாக உள்ளது குறைந்தபட்ச சராசரி மழைப்பொழிவையே பெறுகிறது.

(1) கூற்று மற்றும் காரணம் சரி, இரண்டிற்குமிடையே தொடர்பு உள்ளது

(2) கூற்று மற்றும் காரணம் தவறு, இரண்டிற்குமிடையே தொடர்பு இல்லை

LIVEWORKSHEETS

(3) கூற்று காரணம் தவறு, இரண்டிற்குமிடையே தொடர்பு உண்டு

(4) கூற்று தவறு, காரணம் சரி, இரண்டிற்குமிடையே தொடர்பு இல்லை

34. **பொருத்துக**

| | **ஆஸ்திரேலிய பகுதிகள்** | | **காலநிலை** |
|---|---|---|---|
| i. | வடக்கு கடலோர பகுதி | 1. | மேலைக்காற்று (ஆண்டு முழுவதும் மழைப்பொழிவு) |
| ii. | கிழக்குக் கடற்கரை பகுதிகள் | 2. | மத்திய தரைக்கடல் காலநிலை (குளிர்காலத்தில் மழையும் கோடையில் வெப்ப மிகுதியும்) |
| iii. | மத்திய தாழ்நிலங்களிலிருந்து மேற்கு கடற்கரை பகுதி வரை | 3. | வறண்ட வெப்ப பாலைவன காலநிலை (ஆண்டு சராசரி மழையளவு 25 செ.மீ க்கும் குறைவு) |
| iv. | தென்முனையில் அமைந்துள்ள பெர்த் மற்றும் அடிலைட் பகுதிகளை ஒட்டிய பகுதிகள் | 4. | தென் கிழக்கு வியாபாரக் காற்று (அதிக மழைப்பொழிவு) |
| v. | டாஸ்மேனியா தீவு | 5. | வடக்கு கடலோர பகுதி பருவக்காற்று கால நிலை (கோடையில் அதிக மழைப்பொழிவு) |

| | i | ii | iii | iv | v | | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | 1 | 2 | 3 | 4 | 5 | (2) | 5 | 4 | 3 | 2 | 1 |
| (3) | 4 | 5 | 1 | 2 | 3 | (4) | 3 | 4 | 5 | 1 | 2 |

35. **கூற்று**: ஆஸ்திரேலியாவில் வறண்ட நிலத் தாவரங்கள் உள்ள சாதாரண தாவர அமைப்பை பெற்றுள்ளது.

**காரணம்**: ஆஸ்திரேலியா ஒரு அரை வறண்ட காலநிலை பகுதியாகும்

**விளக்கம்**: ஆஸ்திரேலியாவின் தாவரங்கள், நீண்ட கால வறட்சியை தாங்கி வளரக் கூடியவை.

(1) கூற்று, காரணம், விளக்கம் சரி, இவற்றிற்கிடையே தொடர்பு உள்ளது

LIVEWORKSHEETS

(2) கூற்று, காரணம், விளக்கம் தவறு இவற்றிற்கிடையே தொடர்பு இல்லை

(3) கூற்று, காரணம் சரி, விளக்கம் தவறு இவற்றிற்கிடையே தொடர்பு உள்ளது

(4) கூற்று, காரணம் தவறு, விளக்கம் சரி இவற்றிற்கிடையே தொடர்பு இல்லை

36. கூற்றை ஆராய்க.

**கூற்று:** அண்டார்டிகா கண்டத்தில் பெரிய வகை தாவரங்கள் எதுவும் காணப்படவில்லை சிறிய வகை தாவரங்களான பாசிகள், மரப்பாசிகள், நுண்ணிய பூஞ்சைகள், பிளாங்டன் ஆகியவை காணப்படுகின்றன.

**காரணம்:** அண்டார்டிகா கண்டத்தின் வெப்ப நிலையானது ஆண்டு முழுவதும் உறைநிலைக்கு கீழே இருக்கிறது.

**விளக்கம்:** பனியை தாங்கி வளரும் சிறிய வகை தாவரங்கள் மட்டுமே அண்டார்டிகாவில் காணப்படுகின்றன சில பாசி வகைகள் பனிகளற்ற கடலோரபாறை நிலங்களில் காணப்படுகின்றன பிளாங்டன், பாசிகள் மற்றும் மரபாசிகள் அண்டார்டிகாவில் உள்ள நன்னீர் மற்றம் உவர்நீர் ஏரிகளில் காணப்படுகிறது.

(1) கூற்று, காரணம் மற்றும் விளக்கம் சரி இவற்றிற்கிடையே தொடர்பு உள்ளது

(2) கூற்று, காரணம் மற்றும் விளக்கம் தவறு, இவற்றிற்கிடையே தொடர்பு இல்லை

(3) கூற்று, காரணம் சரி, மற்றும் விளக்கம் தவறு, இவற்றிற்கிடையே தொடர்பு உண்டு

(4) கூற்று, காரணம் தவறு, விளக்கம் சரி, இவற்றிற்கிடையே தொடர்பு இல்லை

37. **கூற்றை ஆராய்க.**

**கூற்று:** அண்டார்டிகா கண்டத்தில் நிறைந்து இருக்கும் தங்கம், பிளாட்டினம், நிக்கல், தாமிரம், பெட்ரோலியம் இருப்பதற்கான தடையம் உள்ள குரோமியம், ஈயம், மாலிப்டினம், தகரம், யுரேனியம், துத்தநாகம் இருப்பதற்கான சாத்திய கூறுகள் உள்ள நிலக்கரி மற்றும் ஹைட்ரோகார்பன்கள் என எந்த கனிம வளங்களும் பயன்படுத்தப்படுவது இல்லை.

**காரணம்:** சர்வதேச ஒப்பந்தத்தின்படி ஆப்பிரிக்க கண்டத்தில் காணப்படும் கனிமங்களை வெட்டி எடுக்க அனுமதி இல்லை.

LIVEWORKSHEETS

(1) கூற்று, காரணம் சரி, இரண்டிற்குமிடையே தொடர்பு உள்ளது

(2) கூற்று, காரணம் தவறு, இரண்டிற்குமிடையே தொடர்பு இல்லை

(3) கூற்று சரி, காரணம் தவறு, இரண்டிற்குமிடையே தொடர்பு உள்ளது

(4) கூற்று தவறு, காரணம் சரி, இரண்டிற்குமிடையே தொடர்பு இல்லை

38. கூற்றை ஆராய்க.

**கூற்று**: வட மற்றும் தென் காந்த துருவங்களுக்கு அருகில் இயற்கையில் தோன்றும் பிரகாசமான இளஞ்சிவப்பு, சிவப்பு நிற மற்றும் பச்சை நிற ஒளியின் கலவை அரோரா என்றும், வட துருவத்தில் ஒளிக்கலவையை அரோரா பொரியாலிஸ்(வட துருவ ஜோதி) என்றும் தென் துருவத்தின் ஒளிக்கலவையை அரோரா அஸ்ட்ராலிஸ் (தென்துருவ ஜோதி) என்றும் அழைக்கப்படுகிறது.

**காரணம்**: அரோரா விளைவானது சூரியனிலிருந்து வரும் மின்னூட்ட துகள்கள் வளிமண்டல மேலடுக்கிலுள்ள அணுக்களுடன் வினைபுரிவதால் உண்டாகிறது.

(1) கூற்று, காரணம் சரி, இரண்டிற்குமிடையே தொடர்பு உள்ளது

(2) கூற்று, காரணம் தவறு, இரண்டிற்குமிடையே தொடர் இல்லை

(3) கூற்று சரி, காரணம் தவறு இரண்டிற்குமிடையே தொடர்பு உண்டு

(4) கூற்று தவறு, காரணம் தவறு, இரண்டிற்குமிடையே தொடர்பு இல்லை

LIVEWORKSHEETS